NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
MAY 2021

TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER II

Time: 2 hours 100 marks

PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This question paper consists of 6 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your own interest to write legibly and to present your work neatly.

IEB Copyright © 2021

SECTION A

QUESTION 1 பகுதி ஒன்று

1. ஐந்து தலைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக:

1.1 அப்பா வாங்கிய புதிய வீடு

1.2 என் செல்லப்பிராணி

1.3 பணம்

1.4 நான் பார்த்த ஒரு நல்ல தமிழ்ப்படம்

1.5 நமது புதிய அடுத்த வீட்டுக்காரர்

30 marks

IEB Copyright © 2021

SECTION B

QUESTION 2 பகுதி இரண்டு

ஏதேனும் மூன்றைப்பற்றி எழுதுக

(Choose any 3 of 4 questions given)

2.1 புதிதாகக் கிடைத்த உன் சைக்கிலைப்பற்றி உன் தோழனுக்கு/தோழிக்கு கடிதம் எழுதுக. (10)

2.2 SMS: வரிசையாக எழுதுக

அப்பா புதிய மோட்டார் வண்டி வாங்கினார்.
நீ வந்து பார்த்தால்,வண்டியைப் பற்றி விவரங்கள் தெரியும்.
வணக்கம். நலமா?
வண்டியில் நாம் கடற்கரைக்குப் போகலாம்.
நன்றி வணக்கம்.
நீ நிச்சயம் வரவேண்டும். (10)

2.3 விளம்பரம்

புதிதாகத் திறக்கப்படும் காய்கறிக் கடையில் வேலை செய்ய விரும்புகிறாய். இக்கடைக்கு விளம்பரம் தயாரித்துக்கொள்ளவும். விற்கப்படும் நான்கு காய்கறிகளின் பெயர்களை தருக. (10)

2.4 சுருக்கி எழுதுக சுமார் 10 - 12 சொற்கள்

"ஏண்டா, பழனி எழுந்திருடா! எழுந்து படிடா" என்று தாய் கிளியாம்பாள் குரல் கொடுத்தார்.

அவர் மறுபடியும் கத்தினார் அவன் எழுந்திருக்கவில்லை. "டேய் நானும், அப்பாவும் வேலைக்குப் போகணுமே! எழுந்திருடா, எழுந்து படி" என்று அவர் உரக்கச் சொன்னார்.

'தினமும் இப்படியா தூங்குவது? கொஞ்சம்கூட கவலை இல்லையே' என்று தனக்குத்தானே பேசிய அவன் தாய், சமைக்கின்ற வேலையை விட்டு வந்தார்; பழனியை உலுக்கினார். அவனை எழுப்ப முயன்றார். பழனி, அம்மாவின் கையைப் பிடித்துத் தூரத் தள்ளிவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டான்

(தமிழ் நாட்டுப் பாடநூல் கழகம்) (10)

30 marks

SECTION C

QUESTION 3 பகுதி மூன்று

3.1 கீழ்வரும் பகுதியைப் படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடை தருக.

நாம் ஒருவரைச் சந்திக்கும்போது அவருடன் கை குலுக்கி வணக்கம் கூறுகிறோம். இச்செய்கை நமது நட்பின் அடையாளமாக விளங்குகிறது. ஜப்பான் நாட்டு மக்களிடையே பிறரை மதித்து மரியாதை செலுத்தும் பண்பு இயல்பாய்க் காணப்படுகிறது. அவர்கள் வீட்டில் அல்லது பணிமனையில் ஒருவரைச் சந்திக்கும்போது நன்றாகத் தலை குனிந்து தங்களின் அன்பு கலந்த மரியாதையைத் தெரிவிக்கின்றனர். சாலை ஓரங்களில் தம் நண்பர்களைச் சந்திக்க நேர்ந்தால் பலமுறை அவர்கள் தலை குனிந்து வணக்கம் கூறுவர்.

(பாடநூலாக்கக் குழு)

3.1.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (2)

3.1.2 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு பெயர்ச்சொற்கள் தருக. (2)

3.1.3 வினைச்சொல் என்றால் என்ன? (2)

3.1.4 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு வினைச்சொற்கள் எழுது (2)

3.2 ஒருமைக்கு பன்மை எழுதுக

உம்: கண் – கண்கள்

3.2.1 வீடு (1)

3.2.2 காடு (1)

3.2.3 மேசை (1)

3.2.4 பூ (1)

IEB Copyright © 2021

3.3 எதிர்ச்சொற்கள்

உம்: பெரிய – சிறிய

3.3.1 மேல் (1)

3.3.2 வா (1)

3.3.3 உள்ளே (1)

3.3.4 இரவு (1)

3.4 ஆண்பாலுக்கு பெண்பால் தருக

உம்: தாத்தா – பாட்டி

3.4.1 சிறுவன் (1)

3.4.2 செல்வன் (1)

3.4.3 பாட்டன் (1)

3.4.4 கணவன் (1)

3.5 பிரித்து எழுதுக

உம்: அந்தப்பையன் = அந்த + பையன்

3.5.1 இரண்டாயிரம் (1)

3.5.2 அந்தப்பெண் (1)

3.5.3 அதைச்செய்தான் (1)

3.5.4 பச்சைக்கிளி (1)

IEB Copyright © 2021

3.6 சேர்த்து எழுதுக
உம்: மரம் + வேர் = மரவேர்

3.6.1 பச்சை + பெட்டி (1)

3.6.2 இதை + பிடி (1)

3.6.3 அதை + செய்தான் (1)

3.6.4 அந்த + பையன் (1)

3.7 சரியாக எழுதுக

3.7.1 நான் கடை போகிறேன் (1)

3.7.2 அவன் வீடு வந்தான் (1)

3.7.3 பூனை எலி பிடிக்கும் (1)

3.8 எண்கள்
உம் போல் சரியான விடை எழுதுக
உம்: ஒன்று + ஒன்று = இரண்டு

3.8.1 ஒன்று + மூன்று = (1)

3.8.2 ஐந்து + ஐந்து = (1)

3.8.3 100 (in Tamil) = (1)

3.9 விலங்குகளின் ஒலிகள்
உம்: நாய் குரைக்கும்

3.9.1 சிங்கம்: (1)

3.9.2 பன்றி (1)

3.10 இறந்த காலத்தில் எழுதுக
உம்: அவன் வருவான் = அவன் வந்தான்

3.10.1 அவன் அடிக்கிறான் (2)

3.10.2 கந்தன் ஓடுகிறான் (2)

40 marks

Total: 100 marks

IEB Copyright © 2021